உ

சிவமயம்.

கணபதிதுணை.

## திருக்கண்ணூர்கோயில்

# தேவாரம்.

இஃது

இத்திருக்கோவிலை

கண்டனூர், தெ. அரு. சித.

அருணாசலஞ்செட்டியார் அவர்களும்,

அ. சி. நா. சிதம்பரஞ் செட்டியார் அவர்களும்

திருப்பணி செய்து

யுவஹு ஆனிமீ 24௳ பிரதிஷ்டை

செய்த காலையில்

அன்பர்கள் யாவரும் ஓதி இம்மை மறுமை யின்பங்களை

எய்துதற் பொருட்டு,

OFFICE OF ... 1 - OCT 193... MADRAS

வி

உ

சிவமயம்.

கணபதி துணை.

# திருக் கண்ணார்கோயிலின் வரலாறு.

சோழவள நாட்டிலே காவிரி நதியின் வடகரையில் திருப்புள்ளிருக்குவேளூருக்குத் தென்கிழக்கே இரண்டுகடிகை தூரத்தில் உள்ள திருக்கண்ணார் கோயில் (குறுமாணக்குடி) என்னும் க்ஷேத்திரமானது, ஐந்திரம் மணிகர்ணிகை என்னும் தீர்த்த விசேடமும், வாமனமூர்த்தி, இந்திரன் முதலியோர் பூசிக்கப் பேற்றை அளித்த ஸ்ரீமுருகுவளர் கோதை அம்மை சமேத ஸ்ரீகண்ணாயிரேசுவரர் என்னும் மூர்த்திப்பிரபாவமும் உடையது. இத் தலத்தைத் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரையரும் பாடியுள்ளார்கள்.

---

# தேவாரப்பதிகத்தின் வரலாறு.

திருஞான சம்பந்தப் பிள்ளையார் சீகாழியில் தமது தந்தையாரையும் மற்றப் பிராமணர்களையும் நோக்கி "இந்தத் தமிழ் நாட்டிலுள்ள சிவஸ்தலங்கள் எங்குஞ் சென்று சுவாமி தரிசனஞ் செய்து திருப்பதிகம் பாடிக்கொண்டு இங்கே வருவேன்" என்று கூறித் தோணியப்பரை வணங்கி விடைபெற்றுக் கொண்டு தமது தந்தையார் பின்வர, முத்துச் சிவிகை மேற்கொண்டு முத்துக் குடை நிழற்ற திருநீலகண்டப் பெரும்பாணரோடும் மற்றையடியார்களோடுஞ் சென்று (திருமறைச் சண்பையாளி) "சிவனார் திருக் கண்ணார் கோயில் பெருவிருப்பால் அணைந்து ஏத்தினார்." அவ்வாறு ஏத்திய திருப்பதிகம் இஃதாகும்.

---

172313

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருஞான சம்பந்தர் திருப்பதிகம்.

## திருக்கண்ணார் கோயில்—பண்—குறிஞ்சி

தண்ணார் திங்கட் பொங்கர வந்தாழ் புனல்சூடிப்
பெண்ணா ணாய பேரரு ளாளன் பிரியாத
கண்ணார் கோயில் கைதொழு வோர்கட் கிடர்பாவம்
நண்ணா வாகும் நல்வினை யாய நணுகும்மே. (க)

(பொழிப்புரை.) குளிர்ச்சி பொருந்திய சந்திரனையும், சீற்றங் கொண்டு எழும் பாம்பையும், ஆகாயத்தினின்றும் இறங்கிவந்த கங்கையையும் தரித்து, பெண்ணும் ஆணுமாக உள்ள மேலான கிருபையைச் செய்கின்ற சிவபெருமான் விட்டு நீங்காது ஒளிரும் கண்ணார் கோயிலைத் தொழுபவர்களுக்குத் துன்பமும் பாவமும் வந்து பொருந்தா; புண்ணியங்களே வந்து பொருந்தும்.

சந்தமர் சந்துங் காரகி லுந்தண் கதிர்முத்தும்
வந்தமர் தெண்ணீர் மண்ணி வளஞ்சேர் வயன்மண்டிக்
கொந்தலர் சோலைக் கோகில மாடக் குளிர்வண்டு
செந்திசை பாடுஞ் சீர்திகழ் கண்ணார் கோயிலே. (உ)

(பொ—ரை.) வாசனை நிறைந்த சந்தன மரங்களையும், கரிய அகிற் கட்டைகளையும், குளிர்ந்த ஒளிவீசும் முத்துக்களையும், அடித்துக்கொண்டு வந்துதங்கிய தெளிந்தநீரோடு கூடிய மண்ணியாறானது வளப்பம் பொருந்திய வயல்களில் நிறைந்து கொத்துக் கொத்தாக மலரும் சோலைகளில் குயில்கள் யாவும் களித்து ஆடவும், குளிர்ந்த வண்டுகள் யாவும் செந்தூக்கு என்னும் பண்ணைப் பாடவும் சிறப்புடன் திருக்கண்ணார் கோயிலென்னுந் தலமானது விளங்கும்.

பல்லியல் பாணிப் பாரிட மேத்தப் படுகானில்
எல்லி நடஞ்செய் ஈசனெம் மான்றன் இடமென்பர்
கொல்லையின் முல்லை மல்லிகை மவ்வற் கொடிபின்னிக்
கல்லிய லிஞ்சி மஞ்சமர் கண்ணார் கோயிலே. (ங)

(பொ—ரை.) பலவகையான இலக்ஷணங்களோடு கூடிய தேவபாணியைப் பூதகணங்கள்யாவும் துதிக்கக் கொடிய மயானத்தில் நள்ளிரவின்கண் நடனஞ் செய்கின்ற சிவபெருமானுடைய இட

இவ்வூரில் கோவிலுக்குத் தென்புறமாய் மிக சமீபத்தில் கப்பிரஸ்தா வோரமாய் வேளாங்கண்ணி திரு. சிதம்பரம் பிள்ளை அவர்களுடைய சத்திரம் ஒன்றிருக்கிறது. இதில் பிரயாணிகள் தங்க இடவசதியுண்டு. யாத்திரீகர்களுக்கு இலவசமாய் அன்னமிடுகிறார்கள்.

கோயில்:— கோயிலின் விமானம் நெடுந்தூரத்திலுள்ளார்க்குந் தெரியக்கூடிய தோற்றப் பொலிவை யுடையது. கிழக்கு நோக்கிய சந்நிதி மட்டக்கோபுரம். எதிரில் வீற்றிருக்கும் நந்தி பெரியது. அருணசலேசுவரர் வீற்றிருக்கிறாரென்பதற்கேற்ப ஆறடி உயரத்திற்குமேல் கட்டப்பட்ட கட்டுமலைமீது சுவாமி வீற்றிருக்கிறார். விமானம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் சோபான மண்டபம் இவைகள் புதுக்கித் திருப்பணி செய்யப்பெற்றிருக்கின்றன. அம்பாள் சந்நிதி கோவிலுக்குள் வடபுறமாய்த் தனியா யிருக்கிறது. இக்கோயில் சகாப்தம் 4848-க்குமேல் செல்லாநின்ற விபவ-ஹூ சித்திரை-மீ த்தில் மயிலப்ப முதலியாரால் புனருத்தாரணம் செய்யப்பெற்று கும்பாபிஷேகம் செய்யப்பெற்றதென்று அம்மன் கோயில் கல்லொன்றில் வெட்டப்பெற்றிருக்கின்றது. விநாயகர், சுப்பிரமணியர், சண்டீசுவரர் இவர்களுக்கு கோயிலுக்குள் தனித்தனி கோயில்களிருக்கின்றன. சுப்பிரமண்யர் வள்ளி தெய்வயானை சமேதராய் ஒரே முகத்தோடு வீற்றிருக்கிறார்.

சண்டிகேசுரர் ஆலயத்துக்கு எதிரில் சிலாவிக்கிரகங்களாய் ஒன்றேகால் அடி உயரத்தில் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் விக்கிரகங்களிருக்கின்றன. கோயிலுக்குள் கீழ்பாகத்தில் சூரியன், இரண்டு பைரவர் மூன்று இலிங்கங்கள் இருக்கின்றன. மடைப்பள்ளி புதிதாக கட்டப்பெற்றிருக்கிறது.

சோபான மண்டபத்தின் தென்புறமாய்ச் சுரங்கம் இருக்கிறது.

கோயிலின் அளவு:— கிழமேல் ஜாதியடி $208\frac{3}{4}$ தென்வடல் ஜாதியடி $135\frac{1}{4}$.

செம்மையாய்ச் செப்பனிடப்பெற்ற நான்கு வீதிகளிருக்கின்றன.

இதர கோயில்கள்:— இக்கோயிலுக்கு வடக்கில் இரண்டு பர்லாங் தூரத்தில் பாண்டவர் தலைவரான தருமர் பூஜித்ததாகச் சொல்லப்பெறும் விசாலாட்சி அம்பாள் சமேத விசுவநாதர் கோயிலும், வடகிழக்கில் இரண்டு பர்லாங் தூரத்தில் பீமன் பூஜித்ததாகச் சொல்லப்பெறும் கைலாசநாதர் கோயிலும் இருக்கின்றன. இக்கோயிலிலுள்ள விக்கிரகங்கள் பீமன் பிரதிஷ்டை செய்தானென்பதற்கேற்ப மிகப் பெரியவைகளா யிருக்கின்றன. தென்மேற்கில் ஒரு பர்லாங் தூரத்தில் நகுலன் பூஜித்ததாகச் சொல்லப்பெறும் சொக்கநாதர் கோயிலும், கிழக்கில் இரண்டு பர்லாங் தூரத்தில் சகாதேவன் பூஜித்ததாகச் சொல்லப்பெறும் சொக்கநாதர் கோயிலும் இருக்கின்றன.

இவ் அருணசலேசுவரர் ஆலயத்திற்கு மிக அண்மையில் தெற்கு நோக்கிய சந்நிதியுடையதாய் அரங்கநாதப் பெருமாள் என்னும் விஷ்ணு ஆலயம் இருக்கிறது. கிராம தேவதைகளான குழந்தையப்பர் என்னும் ஐயனார் கோயில் மேற்குத் திக்கிலும், வடகிழக்குத் திக்கில் பிடாரி கோயிலும், கிழக்குத்திக்கில் மாரியம்மன் கோயிலும், வடகிழக்குத்திக்கில் காளியம்மன் கோயிலும் அமைந்திருக்கின்றன.

உத்ஸவ விக்கிரகங்கள்:— எழுந்தருளப்பண்ணும் பஞ்சலோக விக்கிரகங்களாய், நடராஜா (கூத்தப்பிரான்) சிவகாமி அம்மன், சந்திரசேகரர், அதன் அம்மன், பாலசுப்பிரமண்யர், வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமண்யர், சண்டிகேசுவரர், பைரவர், சூரியன், பிரதோஷநாயகர், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், நிர்த்தனசம்பந்தர், மாணிக்கவாசகர், சுந்தரர், ஏகாசனத்தில் சோமாஸ்கந்தர், தனி அம்மன், போகசக்தி அம்மன், சுக்கிரவார அம்மன் விக்கிரகம் இவைகள் இருக்கின்றன. பெயர் தெரியாத விக்கிரகம் ஒன்றிருக்கிறது அதை ஒரு சிற்பி பைரவர் என்று கூறு

172708

கிருர். விக்கிரகங்களெல்லாம் மிக்க சிற்பத்திறம் வாய்ந்தது.

தலத்தின் பெயர்:— கீழையூர், கீழையில் என்பன.

சுவாமி பெயர்:— அருணுசலேசுவரர்-செம்மலை நாதர், அம்பாள் பெயர்:- பிரமரகுசுமாம்பாள்-வண்ட மரும்பூங்குழலாள். தல விருக்ஷம் பலா.

தீர்த்தத்தின் பெயர்: சிவகெங்கை. சந்நிதியிலுள் ளது புன்ணுகபுட்கரணி தென்மேற்குத்திக்கிலுள்ளது.

சிவகெங்கையில் விதிப்படி மூழ்கி செம்மலைநாத ரையும், வண்டமரும்பூங்குழலாளம்மையையும் வணங் குவோர் இம்மையில் சகல நலன்களையும் மறுமையில் மோட்ச இன்பத்தையும் பெறுவர்.

R23:56:21193K N44

புராண வரலாறு:—இத்தலத்துக்குப் புராணம் ஒன் றுமிருப்பதாகத் தெரியவில்லை. பதினுன்கு வருடம் வனத்திலே சஞ்சரித்த பஞ்சபாண்டவர்கள் இத்தலத் துக்கு வந்து தங்கள் தங்கள் பேரால் தனித்தனி சிவ லிங்கம் பிரதிஷ்டை செய்து வணங்கினுர்கள் என்பது கர்ணபரம்பரை.

இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அருணுசலே சுவரரை அர்ச்சுனன் பிரதிஷ்டை செய்தானென்றும், இதற்கு வடமேற்கில் புன்ணுகபுட்கரணிக்கரையிலுள்ள சொக்கனுதரை நகுலன் பிரதிஷ்டை செய்தானென் றும், வடகிழக்கிலுள்ள கைலாசநாதரையும் பெரிய நாயகியையும் பீமன் பிரதிஷ்டை செய்தானென்றும், வடக்கிலுள்ள விசுவநாதரை தருமன் பிரதிஷ்டைசெய் தானென்றும், கிழக்கிலுள்ள சோமனுதரை சகாதேவன் பிரதிஷ்டை செய்தானென்றும் கூறுகிருர்கள். அகத் தியமகரிஷி நூற்றெட்டுசிவலிங்கம் பிரதிஷ்டைசெய்து பூஜித்த தலத்தில் இதுவுமொன்றெனக் கூறப்படுகிறது.

கல்வெட்டுக்கள்:— இக்கோயிலிலுள்ள கல்வெட்டு களை சிலாசாசன பரிசோதக இலாகாதாரர்கள் படி யெடுத்துக்கொண்டு போனதாகத் தெரியவில்லை. கல் வெட்டுகளும் திருப்பணி செய்த காலங்களில் கற்களை மாற்றி அடுக்கி யிருப்பதால் தொடர்பான சாசனங்க

ளில்லே. இவ்வூர் கீழையூர் என்று வழங்கி வந்தாலும் கல்வெட்டுகளில் ராசேந்திர சோழவளநாட்டுக்கீழை யில் என்று காணப்படுகிறது. ஒரு சாசனத்தில் கோயில் கைங்கர்யத்திற்கு இன்னின்னார் இத்தனை இத்தனை ஆட்கள் விடவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

வாகனங்கள்:— வேலைப்பாடமைந்ததாய் ரிஷப வாகனம், மயில்வாகனம், குதிரைவாகனம், சிறிய ரிஷப வாகனம், ஆட்டுக்கடா வாகனம் இவைகளிருக்கின்றன. நல்ல நாதமுள்ளதாய் சுமார் 300 சேர் நிறையுள்ள மணியொன்றுமிருக்கிறது.

காலங்கள்:- காலே, உச்சியம்போது, மாலை, அர்த்த சாமம் என நான்குகால பூஜைகள் நடந்துவருகின்றன.

உத்ஸவங்களும், அவற்றின் செலவுகளும்:— இப்பொழுது நவராத்திரி உத்ஸவமும், கந்தசஷ்டி உத்ஸவமுந்தான் சிறப்பாக நடைபெறுகிறது.

| | |
|---|---|
| வைகாசி விசாகம் | 3—8—0 |
| ஆனித்திருமஞ்சன அபிஷேகம் | 3—8—0 |
| ஆடி அயனம் | 3—8—0 |
| ஆடிச் சுக்கிரவாரங்கள் ஒவ்வொன்றுக்கும் | 3—8—0 |
| ஆடிப்பூர உத்ஸவம் | 3—8—0 |
| ஆவணிமூலம் | 3—8—0 |
| தீபாவளி அபிஷேகம் | 25—0—0 |
| கந்தசஷ்டி உத்ஸவம் | 25—0—0 |
| கார்த்திகை ஞாயிற்றுக்கிழமை ஒவ்வொன்றிற்கும் / கார்த்திகைச் சோமவாரம் ஒவ்வொன்றிற்கும் | 7—0—0 |
| திருக்கார்த்திகை | 7—0—0 |
| தனுர் மாசம் | 6-12—0 |
| சங்கராந்தி | 8—0—0 |
| பங்குனி உத்திரம் | 3—8—0 |

இவைகளைத் தவிர விநாயக சதுர்த்தி, நவராத்திரி உத்ஸவம் விஜயதசமி, சூரசங்காரம், திருக்கல்யாணம், அன்னாபிஷேகம், திருவாதிரை, முதலிய ஏற்பாடுகள் உபயக்காரர்களால் நடத்தப்பெறுகிறது.

அர்த்தசாமக்கட்டளை கந்தசாமி தேசிகர் என்பவரால் ஏற்படுத்தப்பெற்று ஒரு படி அரிசி சம்பா சாதம் தேசாந்திரிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.

கணபதிதுணை.

# திருக்கண்ணார் கோயில் திருப்பணி செய்வித்தோர் சிறப்பு.

திருமகள் நுதற்கோர் திலதம தென்னத்
திகழுறுஞ் சோழநன் னாட்டி
லருகினின் மண்ணி யாறது செல்லு
மழகினை யுடையதுந் தேவர்க்
கொருதிரு வரசா மிந்திரன் பூசை
யுயர்வுறச் செய்ததுங் கண்ணா
னொருதிரு வலதா ரத்தினிற் றாபித்
தொளிர்வது மானநற் றளியை. (க)

வேறு.

செல்வமதாற் சிறந்ததிருக் கண்டனூர் சிதம்பரன்றன்
சேயாய் வேண்டும்
பல்லறமுஞ் செயுமருணா சலனவனு நாச்சியப்பன்
பயந்த தோன்றல்
எல்லொளிசேர் சிதம்பரனென் னொருநாமம் பூண்டுபுக
ழேய்ந்தோன் றானுஞ்
சொல்லியசொற் றவறாமை வாய்மைகல்வி நலமேவுற்றுந்
துலங்கி வாழ்வார். (உ)

இவ்விரண்டு பெயருடையோ ரிருவருமித் திருப்பணியை
யியற்ற வெண்ணி
யொவ்வொருநற் றிருத்தளியாய்ச் சென்றிருந்தே யடிவணங்கி
யுவந்து வாழ்நாள்
நவ்வியமர் கரன்கண்ணார் கோயில்பணி செய்யுமென
நலத்தின் வேண்டும்
அவ்வுரையைக் கேட்டலுமே யகமகிழ்ந்தே யப்பணியை
யமர்ந்து செய்தார். (௩)

திருக்கண்ணு யிரக்கடவுட் கேற்றகர்ப்பக் கிருகமதிள்
தேவர் கோன்போர்த்
திருக்குளநல் லர்த்தமகா மண்டபஞ்சோ பானவகை
திகழும் வாயில்
இருக்கதிற்கூ றியமுறையிற் கோபுரங்கள் முதலெவைவ்யு,
மேற்பச் செய்தார்
மருக்குலவு கொன்றையணி சிவன்பணியை யிவர்போல
வகுத்தார் யாரே. (ச)

இப்பணிதான் றமைத்து யுவவருட மாணிமதி
யிருபா னுங்கி
லொப்பதிலாப் பூர்வபக்கத் திந்துவா ரமுமிதுன
வோரை யுஞ்சேர்
தப்பதிலாச் சப்தமியாந் திதியதுதா ரகையத்தஞ்
சார்ந்த யோக
மிப்பெரிதாந் திருநாளில் செய்வித்தார் குடமுழுக்கை
எற்ற வாறே. (ரு)

திருக்கணு யிரக்கடவுட் கேன்றதிருப் பணியதனைச்
செய்தோர் வாழ்க
திருக்கணுற் கண்டவர்கள் கேட்டவர்கள் யாவருமே
திகழ்ந்து வாழ்க
இருக்கதாற் றமுணர்ந்த வர்று தினம் பூசிப்போ
ரெவரும் வாழ்க
பெருக்கமாம் பூதியுட னக்கமணிக் திடுஞ்செல்வர்
பிறங்கி வாழ்க. (சு)

172313

குமரன் பிரஸ், சீகாழி. 28—6—35.